**செய்தி வெளியீடு எண்:879** **நாள்:19.11.2020**

**<u>இன்று (19.11.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வனவாசியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வனவாசி அரசினர் பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாணவர், மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் திறப்பு விழா, பல்வேறு முடிவுற்ற பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், வனவாசியில் இயங்கி வரும் பல்வகை தொழில் நுட்பக் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், சுமார் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் புதிதாக மாணவ, மாணவியர் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டி இன்றைய தினம் திறக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதி ஒரு பின்தங்கிய பகுதி. ஏழை, எளிய மக்கள் நிறைந்த பகுதி. ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில இந்தப் பகுதியிலிருந்து வெளியே சென்று கல்வி கற்க அதிகமான பொருளாதாரம் தேவைப்படும். எனவே, நான் 2011 மற்றும் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களின் போது, மக்கள் வைத்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, இப்பகுதியில் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி திறக்கப்பட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அதேபோல, மாணவர்கள் இங்கேயே தங்கி படிக்க விடுதி வேண்டுமென்ற கோரிக்கையும் இன்றையதினம் அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வனவாசி அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி 27.7.2018 அன்று புதிதாக துவங்கப்பட்டு, இக்கல்லூரிக்கு ஏற்கனவே ரூபாய் 23 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இதில் 677 மாணவர்களும், 150 மாணவியர்களும், என மொத்தம் 827 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு முடிவுற்ற பணிகள் இன்றைக்கு திறக்கப்பட்டுள்ளன.

நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் ரூபாய் 9 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற ஏரிகள் புனரமைப்பு பணிகள் மற்றும் புதிய நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்பு பணிகளும்,

காவல் துறையின் சார்பில் ரூபாய் 1 கோடியே 32 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கொங்கணாபுரம் ஊரக காவல் நிலைய கட்டடம் மற்றும் ஆத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலகக் கட்டடமும்,

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் ரூபாய் 2 கோடியே 2 இலட்சத்து 11 ஆயிரம் மதிப்பீட்டில் சங்ககிரி வட்டம், சின்னப்பிள்ளையூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கலை மற்றும் கைத்தொழில் அறை கூடம் மற்றும் சுற்றுச் சுவர் பணிகளும்,

நூலகத் துறையின் சார்பில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு நூலகக் கட்டடமும்,

கூட்டுறவுத் துறையின் சார்பில் ரூபாய் 5 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகத்தில் புதிய ஆய்வுக் கூட்டரங்கம் மற்றும் சமுதாயக் கூடம் புனரமைத்து நவீனமயமாக்கும் பணிகள், செட்டிமாங்குறிச்சி, மொத்தயனூர், பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய 3 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான புதிய அலுவலக கட்டடங்கள் மற்றும் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எண்ணெய் பிழியும் ஆலை ஆகிய 7 முடிவுற்ற பணிகளும்,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூபாய் 51 இலட்சத்து 71 ஆயிரம் மதிப்பீட்டில் எடப்பாடி கோட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வருவாய் பிரிவு அலுவலக கட்டடமும்,

எடப்பாடி வட்டம், ஆடையூரில் ரூபாய் 19 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துணை மின் நிலையமும்,

கே.ஆர் தோப்பூரில் ரூபாய் 15 கோடியே 62 இலட்சத்து 1 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துணை மின் நிலையமும்,

பேரூராட்சிகள் துறையின் சார்பில் பொது நிதி திட்டத்தின் கீழ், செந்தாரப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சிக்கு ரூபாய் 49 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறை மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய பேரூராட்சி அலுவலக புதிய கட்டடமும்,

எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பூலாம்பட்டி பேரூராட்சியில் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த 42 தொகுப்பு வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ள பணிகளும்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களுக்குட்பட்ட முறையாக குடிநீர் கிடைக்கப்பெறாத 137 குடியிருப்புகளுக்கு மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ், ரூபாய் 23 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் பணிகளும்,

ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடமும்,

எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 1 இலட்சத்து 85 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 11 பணிகளும்,

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் (சகோதரர் திரு.என்.சந்திரசேகரன்) நிதியிலிருந்து உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 99 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 10 பணிகளும்,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ரூபாய் 50 இலட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டில் கோணசமுத்திரம், அரசநத்தம், சாணாரப்பட்டி ஆகிய 3 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு கட்டப்பட்டுள்ள புதிய

அலுவலக கட்டடங்கள் மற்றும் ரூபாய் 60 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 புதிய அங்கன்வாடி மைய கட்டடங்களும்,

மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கரட்டூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் சாணாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டடங்களும்,

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ், ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டில் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், சின்னகல்ராயன் வடக்குநாடு ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டடங்களும்,

வேளாண்மை துறையின் சார்பில் மகுடஞ்சாவடியில் ரூபாய் 1 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டடமும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் ஆத்தூரில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டடமும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், ரூபாய் 3 கோடியே 2 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் வீரபாண்டி, காருவள்ளி, கொளத்தூர், சின்னக்கோனூர், காட்டுக்கோட்டை, ஜலகண்டாபுரம், முளுவி மற்றும் செம்மநத்தம் ஆகிய 8 இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனை கட்டடம் மற்றும் கால்நடை மருந்தக கட்டடங்களும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் சார்பில் ரூபாய் 9 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு புதிய கட்டடம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் இரண்டாம் நிலை வசதியுடன் கூடிய கூடுதல் கட்டடம், மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உயர் கலப்பின சார்பு மையக் கட்டடம், கொளத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவ பிரிவு கட்டடம் மற்றும் கரியகோவில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம் உள்ளிட்ட 5 முடிவுற்ற பணிகளும்,

வருவாய்த் துறையின் சார்பில் ரூபாய் 40 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பீட்டில் ஏற்காடு மற்றும் எடப்பாடியில் குறுவட்ட அளவையர்களுக்கான குடியிருப்புடன் கூடிய 2 புதிய அலுவலக கட்டடங்களும்,

பதிவுத் துறையின் சார்பில் ரூபாய் 2 கோடியே 76 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடங்களும்,

பால்வளத் துறையின் சேலம் ஆவின் சார்பில் ரூபாய் 94 இலட்சத்து 41 ஆயிரம் மதிப்பீட்டில் சேலம் பால் பதன ஆலையில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி தயிர் பதப்படுத்துதல் மற்றும் தயிரை கப்புகளில் நிரப்பும் இயந்திரம் மற்றும் சங்ககிரி வட்டம், தேவூரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கான புதிய அலுவலக கட்டடமும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் ரூபாய் 10 கோடியே 56 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கல்வராயன்மலை, கருமந்துறை, பகடுபட்டு, கரியக்கோயில்வளவு, அருநூத்துமலை, பச்சமலை வேப்படி, குன்னூர், பச்சமலை கொடுங்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கழிவறைகள், பணியாளர் குடியிருப்புகள், சுற்றுச் சுவர், குடிநீர் வசதியுடன் உணவருந்தும் அறை, சமையலறை கட்டடங்கள் உள்ளிட்ட 9 முடிவுற்ற பணிகளும் என மொத்தம் இன்றைய தினம் இந்த விழாவின் மூலம் ரூபாய் 123 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற 86 திட்டப் பணிகள் என்னால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதேபோல இன்றைய தினம் நீர் வள ஆதாரத் துறையின் சார்பாக 100 ஏரிகளில் நீர் நிரப்புவதற்கான பல்வேறு பணிகளுக்காக ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆனால், இப்பொழுது, ஏரிகளை தூர்வார வேண்டுமென்று விவசாயிகளிடம் இருந்து வந்த கோரிக்கைகளை ஏற்று அம்மாவின் அரசு மேட்டூர், ஓமலூர், எடப்பாடி, சங்ககிரி என 4 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஏரிகளை ரூபாய் 44 கோடியே 43 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளுக்கும், இரண்டு தடுப்பணைகள் கட்டும் பணிக்கும் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

காவல் துறை, பள்ளிக் கல்வித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சேலம் மாநகராட்சி சார்பில், சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், ரூபாய் 63 கோடியே 26 லட்சம் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப் பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. பேரூராட்சித் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. வருவாய்த்துறை, பால்வளத் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில், என மொத்தம் ரூபாய் 118 கோடியே 93 லட்சம் மதிப்பீட்டில் 44 புதிய திட்டப் பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்று மகிழ்ச்சியான செய்தி இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், ஏற்கனவே மூடப்பட்டிருந்த தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனமும் இன்றைய தினம் திறக்கப்பட்டுள்ளது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 6.2.1979 அன்று இந்த மேக்னசைட் நிறுவனத்தை துவக்கினார். இது ஒரு அரசு பொதுத் துறை நிறுவனம். இதனுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 100 கோடி. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாத்தையங்கார்பட்டி கிராமத்தில் அமைந்த அரசு மேக்னசைட் சுரங்கத்தில், மேக்னசைட் மற்றும் டியூனைட் கனிமங்கள் இயந்திர மயமாக்கப்பட்ட திறந்தவெளி சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்படுகிறது. இந்தியாவில் ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கும் அரிய வகை கனிமம் மேக்னசைட் ஆகும். நம் நாட்டின் மொத்த மேக்னசைட் கனிம வளத்தில் 70 சதவிகிதம் தமிழ்நாட்டில், அதாவது சேலம் மாவட்டத்தில் கிடைக்கப் பெறுகிறது. இரும்பு மற்றும் இரசாயன தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அத்தியாவசியமான வெப்பம் தாங்கும் உலை, சுவளைக் கற்கள் உற்பத்தி செய்ய இக்கனிமம் உருவாக்கப்படுகிறது. இதனோடு இணைத் தனிமமாகக் கிடைக்கும் டியூனைட்டும் இரும்புத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்நிறுவனம் தன் இரு வேறு தொழிற்சாலைகளில் மேக்னசைட் தனிமத்தை முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் என்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்கிறது.

2018–ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் ஒப்புதல் வேண்டிய சுரங்கப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இதற்காக மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டு, குறிப்பு விதிமுறைகள்

பெறப்பட்டு 29.1.2020 அன்று பொதுமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு மாநில சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கு இழப்பீடாக ரூபாய் 72 கோடி செலுத்தப்பட்டு தடையில்லாச் சான்று பெறப்பட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டு, 10.11.2020 அன்று மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து சுரங்கம் செயல்பாடு ஒப்புதல் பெறப்பட்டது. இன்றையதினம் இச்சுரங்கப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். சுரங்கப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டதால் 534 தொழிலாளர்கள் நேரடியாகவும் 2000 தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பயனடைகிறார்கள். இனி, இப்பகுதி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும், மேக்னசைட் இறக்குமதி குறைவதினால் நாட்டின் பொருளாதாரம் உயர்வதற்கும் வழிவகுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என இருபெரும் தலைவர்களுமே கல்விக்கு முன்னுரிமை வழங்கினார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்தில் அதிகமான கல்லூரிகள் தனியாருக்கும் கொடுக்கப்பட்டன, அரசின் சார்பாகவும் திறக்கப்பட்டன. ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி கற்க தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் பொருளாதார செலவு அதிகமாகும். எனவே, சிறப்பாகக் கல்வி கற்கக்கூடிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பான கல்வி கற்கக் கூடிய வகையில், ஏழை, எளிய குடும்பங்களில் பிறந்த மாணவ, மாணவியரும் உயர்கல்வி பயில வேண்டுமென்பதற்காக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அதிக அளவில் திறந்தார்கள்.

அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும், அதிக அளவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திறந்து வருகிறது. அந்த வகையில் தான் மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, இந்த ஆண்டுகூட புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகளை தமிழக அரசு நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு கொடுத்திருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு முழுவதும் உயர்கல்வி படிக்க கூடியவர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

இந்திய அளவில் பார்க்கின்ற பொழுது, **2011–**ஆம் ஆண்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது, **32** சதவிகிதம் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையை மாற்றி, இப்பொழுது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலும் சரி, அம்மா வழியில் செயல்படுகின்ற அம்மாவின் அரசும் ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிக்க நல்ல சூழ்நிலையை உருவாக்கி அதற்கு அதிகமான கல்லூரிகளைத் திறந்ததன் விளைவாக இன்றைய தினம் நாட்டிலேயே உயர்கல்வி படிப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டுமல்லாமல், பொறியியல், பாலிடெக்னிக், ஐடி கல்லூரிகள் என பல்வேறு கல்லூரிகளை தமிழகத்தில் திறந்ததன் விளைவாக, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதேபோல தமிழக வரலாற்றிலேயே, இந்திய வரலாற்றிலேயே ஒரே நேரத்தில் **11** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை கொண்டு வந்த சரித்திரம் கிடையாது. இந்தியாவிலேயே, தமிழ்நாடு ஒரு சரித்திர சாதனையை படைத்திருக்கிறது. ஒரே நேரத்தில் **11** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைக் கொண்டுவந்து, **2021–22**ஆம் ஆண்டு **1,650** மாணவர்கள் ஒரே நேரத்தில் மருத்துவக் கல்வி பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். ஏற்கனவே **2011–**ஆம் ஆண்டு வரை, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் வரை, தமிழகத்தில் **1,945** மருத்துவ இடங்கள் தான் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று சுமார் **3,600** மாணவர்கள் கூடுதலாக மருத்துவக் கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம். இதன்மூலம் எந்தளவிற்கு எங்களுடைய அரசு மாணவர்கள் உயர்கல்வி பயில குறிப்பாக மருத்துவக் கல்வி பயில முயற்சிகள் எடுத்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால், சில அரசியல் கட்சித் தலைவர்கள் நீட் தேர்வு, நீட் தேர்வு என்று எப்பொழுது பார்த்தாலும் குரல் கொடுக்கின்றார்கள். பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களும் அதே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். ஆனால், கேட்க வேண்டிய இடத்தில் கேட்பதில்லை. கேட்க வேண்டிய இடத்தில் கேட்டால் தானே சரியான பதில் கிடைக்கும். ஏனென்றால், நீட் தேர்வை கொண்டு வந்தது யார்? மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஆட்சியில் அங்கம் வகித்தது. அந்த காலக்கட்டத்தில்தான் நீட் தேர்வை கொண்டு வந்தார்கள். ஆனால், முழு பூசணிக்காயையை சோற்றில் மறைப்பது போல எதிர்கட்சியினர் பேசுகின்றனர்.

இவர்கள் கொண்டுவந்த நீட் தேர்வை நாங்கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தோம், சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தோம். இருந்தாலும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நீட் தேர்வை நாம் அமல்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம். தவிர்க்க முடியாத சூழ்நிலையில், நீட் தேர்வை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த காலக்கட்டத்தில் நாம் ஏழை எளிய மாணவர்களின் நிலையை எண்ணிப் பார்த்தோம். எந்த எதிர்க்கட்சித் தலைவரும், எந்த எதிர்க்கட்சியனரும் கோரிக்கை வைக்கவில்லை, பொதுமக்களும் கோரிக்கை வைக்கவில்லை. இதற்கு எப்படி தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் சிந்தித்தோம், நான் சிந்தித்தேன். இன்றைக்கு ஏழை, எளிய மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், அதிக மதிப்பெண் பெறமுடியாத காரணத்தால் அவர்களுக்கு மருத்துவ இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மாணவர்களுக்கு எந்த வகையில் நன்மை செய்ய முடியும் என்று எண்ணிப் பார்த்து, என்னுடைய எண்ணத்தில் உதித்தது உள்ஒதுக்கீடு. 7.5 சதவிகித உள்ஒதுக்கீட்டைக் கொண்டுவந்தோம். பெரும்பாலும் ஏழை, எளிய மாணவர்கள் தான் அரசுப் பள்ளிகளில் படிக்கின்றார்கள். அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டை வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டு, உத்தரவு வழங்கி நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். 7.5 சதவிகித உள் ஒதுக்கீட்டின்படி நம்முடைய மாவட்டத்தில் மட்டும் 21 மாணவர்கள் இன்றைக்கு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருக்கின்றார்கள். அதுவும் 21–வது மாணவர் நீட் தேர்வில் 211 மதிப்பெண் வாங்கி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார் என்று சொன்னால், மாண்புமிகு அம்மாவின் அரசு ஏழை, எளிய மக்கள்

மீது எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த ஆண்டு, அரசுப் பள்ளிகளில் படித்த 6 மாணவர்கள்தான் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளிகளில் 41 சதவீதம், அதாவது 8,41,251 மாணவர்கள் 12ஆம் வகுப்பு படிக்கிறார்கள். அதில் தேர்ச்சி பெற்று, நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றபின், கலந்தாய்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தான் மருத்துவக் கல்லூரியில் பயில இடம் கிடைக்கும். தமிழ்நாட்டிலுள்ள 3,054 அரசுப் பள்ளிகளில் 3,44,485 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இந்த ஆண்டு சுமார் 313 மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயில இடம் கிடைத்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மாவின் அரசால் இயற்றப்பட்ட சட்டமான 7.5 உள் ஒதுக்கீட்டின் வாயிலாக, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர் கூட மருத்துவக் கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இப்படி கல்வியில் பல்வேறு புரட்சிகளைச் செய்த அரசு அம்மாவின் அரசு என்பதை கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

ஒரு சொட்டு நீர் கூட வீணாகக் கூடாது என்பதற்காக நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக அம்மாவின் அரசு சிறப்பான முறையில் செயல்பட்டதன் விளைவாக 2019–2020ல் இந்திய அளவிலே தேசிய விருதைப் பெற்றிருக்கின்றோம். இந்தத் துறையில் மட்டுமல்ல, பல துறைகளில் தேசிய விருதுகளை பெற்று சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு என்பதை பெருமிதத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக, ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் அனைத்து தூர்வாரப்பட்டன, கால்வாய்கள் நவீனமாக்கப்பட்டன. நீரை சிக்கனமாக பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்தோம். அதன் மூலமாக, என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு டெல்டா மாவட்டப் பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையத்தில் 32 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சரித்திர சாதனையை அம்மாவின் அரசு படைத்திருக்கின்றது. கடந்த காலங்களில் 23 லட்சம் மெட்ரிக் டன் நெல் தான் அரசு கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்தார்கள். 23 லட்சம் மெட்ரிக் டன் எங்கே? 32 லட்சம் மெட்ரிக் டன் எங்கே?

ஆகவே, அம்மாவின் அரசு எந்த அளவிற்கு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு, டெல்லியை பார், கேரளாவை பார் என்று குறை சொன்னார்கள். இப்பொழுது நீங்கள் டெல்லியையும், கேரளாவையும் பாருங்கள். ஆனால், இப்பொழுது பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறதென்றும், கேரளாவிலும், டெல்லியிலும் குறைந்திருக்கிறதென்றும் அன்றையதினம் சொன்னார்கள். இன்றைக்கு அந்த இடங்களில் அதிகமாகியிருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு சரியான முறையில் நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால், கொரோனா நோய்த் தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டு, படிப்படியாக குறைந்து கொண்டிருக்கின்றது. மற்ற மாநிலங்களில் அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், தமிழ்நாட்டில் குறைந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு படிப்படியாக வேளாண் பணிகள் 100 சதவீதம் நடைபெற்று வருகிறது. தொழிற்சாலைகளும் 100 சதவிகிதப் பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. படிப்படியாக இயல்பு நிலை திரும்புவதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, அதற்கு பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களுக்கு தினந்தோறும் என்னைப் பற்றி நினைத்தால்தான் தூக்கமே வரும். முதலில், இந்த ஆட்சி ஒரு வாரம்கூட தாங்காது, ஒரு மாதம் தாங்காது, 6 மாதம் தாங்காது, ஒரு வருடம் தாங்காது என்று சொன்னார்கள். இப்பொழுது, மூன்றாண்டுகள் நிறைவு பெற்று நான்காவது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் GDP 8 சதவிகிதம் இருக்கிறது, வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்ற காலகட்டத்தில் கூட, புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வருகிறது. கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்ட மார்ச் மாதம்

முதல் இப்பொழுது வரை அதிகமான தொழிற்சாலைகள் துவங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்.

வேளாண்மையில் முதலிடம், தொழிற்சாலைகள் துவங்குவதில் முதலிடம், சுகாதாரத் துறையில் முதலிடம், கல்வியில் முதலிடம் என எல்லாவற்றிலும் முதலிடத்தில் தமிழ்நாடு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் திரு.ஸ்டாலின் அவர்களால் இதனை பொறுக்க முடியவில்லை. ஏதோ பழனிசாமி கிராமத்திலிருந்து வந்திருக்கிறார், இவரால் ஒன்று செய்ய முடியாது என்று நினைத்தார். அனைத்து துறைகளிலும் சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கிறோம், தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். வேண்டுமென்றே திட்டமிட்டு தினந்தோறும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறையில் இருந்துகொண்டே ஏதாவது ஒரு அறிக்கை விடுகிறார். ஒரு நாளாவது வெளியில் வந்திருக்கிறாரா? அறையில் இருக்கும்போதுகூட, கையில் உறை, கண்ணாடி அணிந்து கொண்டுதான் இருக்கிறார். அங்கு என்ன வைரஸா வரப் போகிறது? அவர் ஒருவர்தான் தனியாக இருக்கிறார். இங்கே கூட நாம் எல்லாம் இருக்கிறோம். ஆகவே, நாட்டு மக்களுக்கு உழைக்கக்கூடிய ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தமிழ்நாடு முழுவதும் 4 மாவட்டங்களைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று, மாவட்டங்களில் என்னென்ன வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவிற்கு நடைபெற்றிருக்கின்றது போன்ற விவரங்களை கேட்டறிந்தேன். கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு பணிகளில், மாவட்ட நிர்வாகம், மக்கள் நல்வாழ்வுத் துறை, வருவாய்த் துறை போன்ற துறைகள் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விவரத்தை ஆய்வு செய்து, இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தி, ஆலோசனைகள் வழங்கியதன் விளைவாக இன்றைக்கு தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு, குறைந்திருக்கிறது. வேண்டுமென்றே தினந்தோறும் அறிக்கை விட்டு அறிக்கை நாயகனாக வேண்டுமானால் திரு. ஸ்டாலின் திகழலாமேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய எந்தக் காலத்திலும் உங்களுடைய கட்சியும் வராது, உங்களுடைய

ஆட்சியையும் மக்கள் கண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை செய்தார்கள்? ஆனால், நாங்கள் எவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம், நாட்டு மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன போன்றவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வேண்டுமென்றே அரசின் மீது பழி சுமத்துவது, அமைச்சர்கள் மீது பொய்யான, அவதூறான செய்திகளை பத்திரிகையில் வெளியிடுவது, இதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நிறுத்திவிட்டு, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை மக்களுக்குச் சொல்லுங்கள். அதன் மூலமாக எதிர்க்கட்சி வரிசையிலாவது அமர்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும், நாட்டு மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட அரசு. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உருவாக்கிய இயக்கம், நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இந்த இயக்கம். அந்த வகையில், இருபெரும் தலைவர்கள் காட்டிய வழியில் இன்றைக்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏராளமான திட்டங்களை வழங்கி, தமிழகத்தில் மக்களுக்கு நல்லது செய்கின்ற ஒரே ஆட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சி என்பதை நாங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம், நிரூபிப்போம் என்று சொல்லி இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்ட நிர்வாகத்திற்கும், உயர்கல்வித் துறைக்கும் எனது நன்றியை தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**